[1972 சனவரி 28

தனியார் பேருந்துகளில் திருக்குறள்

*109 வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தனியார் பேருந்துகளிலும் திருக்குறள் எழுதி வைக்கும் ஆணை பிறப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிகளை ஒவ்வொன்றாக எழுதி வைக்கப் பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அரசுப் பேருந்துகளில் வெறுங் குறள்கள் மட்டும் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றின் பொருளையும் எழுத அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழ் படித்தவர்களுக்கு பொருள் தெரியும்.

மன்னார்குடி—ஆலங்குடி நகரப்பேருந்து.

*110 வினா.—திரு. ந. சோமசுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

மன்னார்குடியிலிருந்து நீடாமங்கலம் வழியாக ஆலங்குடிக்கு டவுன் பஸ் விடுகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, பொதுமக்களுடைய நலனை உத்தேசித்து, இந்தத் திட்டத்தை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே மன்னார்குடியிலிருந்து நீடாமங்கலத்திற்கு 94 ட்ரிப்பும், நீடாமங்கலத்திலிருந்து ஆலங்குடிக்கு 66 ட்ரிப்புக்களும் ஓடுவதால் வேறு தேவையில்லை.

THIRU K. T. K. THANGAMANI : Sir, there was a question relating to the running of lorry service after mid-night, to be answered by the Hon. Minister for Transport on the 25th instant and it was postponed. I want to know when it is going to be taken up?